RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-222925

# பாராட்டெடுத்தல் வழி அக மாந்தரின் ஆளுமைத்திறன் வெளிப்பாடு

**பா. அருண்பிரியா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, தங்கம்மாள் பெரியசாமி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

# Appreciation is a Personality of Aka Mantar's

**P. Arunpriya [a, *]**

[a] Department of Tamil, Thangammal Periyasamy Girls Higher Secondary School, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author:
dr.arunpriya007@gmail.com

Received: 21-09-2022
Revised: 17-11-2022
Accepted: 24-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

Appreciation is considered to be praise based on majority and it gives happiness. In terms of literature, this sermon has gone beyond the status of a speech, and has risen to the level of an advice, or a text of virtue, in which the Agha Mantars themselves instruct the Agha Mantars to perform beneficial virtues in times of theft and chastity. Moving the relationship between the husband and the wife from the field, preventing the separation of the hero to improve the love life. It also advices the husband to return as soon as possible after earning some material things for life. The separation of the hero in the middle of the relationship and the ability to effectively handle such essential situations are clearly explained well in this article. This article examines the importance of the unique personality.

**Keywords:** Sangam Literature, Agha Mantars, Love, Virtue

## முன்னுரை

அக புற பக்கங்கள் கொண்ட பழந்தமிழரின் வாழ்வியலை மிகவும் நுட்பமாகவும், சொற்ச் சிக்கனத்துடனும் சங்க பாடல்கள் பதிவு செய்கின்றன. அறம் பொருள் இன்பத்தின் வழி திறம்பட வாழ்க்கை நிகழ்த்திய பழந்தமிழரின் உயரிய அக வாழ்வில் நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு வினையும் ஆளுமையின்பார் பட்டதே ஆகும். சங்க மாந்தர்களின் அக வாழ்வையும், ஆளுமைச் செயல்பாட்டையும் தனித்துப் பிரிக்க இயலா வண்ணம் உட்பினைத்து வைத்திருக்கிறது சங்கப் புலவர்களின் மொழி ஆளுமை திறன். களவில் உடன்பட்டு, வரைவில் பலப்பட்டு, கற்புக்கடம் பூண்டு அகமாந்தர் மேற்கொண்டு ஒழுகிய ஒவ்வொரு செயல்பாட்டிலும் பாராட்டு எடுத்தல் எனும் தலைசான்ற ஆளுமை பண்பு தன் தலையாய பணியைச் செய்திருக்கிறது. ஆளுதல் மற்றும், ஆளப்படுதல் என்பதான இரண்டு பக்கங்களுக்கும் நிகரான இன்பத்தை நல்கும் இந்த பாராட்டுணர்வை தலைவன், தலைவி, தோழி ஆகிய அகமாந்தர்கள் தங்களின் மிகை உணர்வுக்காக மட்டுமல்லாமல், வினை நிகழ்விற்காகவும் பயன்படுத்திக்கொண்டனர். இந்த உள்ளியது முடிக்கும் உள்ளச் சிறப்பை தொகை இலக்கியங்களை ஆய்வுக் களமாக கொண்டு, உளவியல் அணுகு முறையின் வழி எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## பாராட்டல்

பாராட்டு என்பது பிறர் உளம் மகிழும்படி பொய்யாகவோ, மெய்யாகவோ கூறும் நல்லுரை. இப்பாராட்டு குறித்த அறிவியல் வேரை ஆராய்கின்றபொழுது பாராட்டுணர்வு எழுந்ததற்கான சுவையான உளவியல் வரலாறு அறியவரும். நம்முடைய மூளையின் அடிபாகத்தில் 'அமைக்டாலா' என்ற ஓர் உறுப்பு உள்ளது. இதை 'ஆதிகால மூளை' எனலாம். ஆதிகால மனிதனுக்குத் தேவையாக இருந்த உணர்ச்சிகள் இரண்டுதான். அச்சம், காதல். அச்சப்பட வேண்டியவற்றிலிருந்து விலகிவிடவும், தம் இணையிடம் காதல் கொள்ளவும் மட்டுமே தெரிந்திருக்க வேண்டியிருந்த மனிதனுக்கு மிகச்சிறிய உணர்ச்சியை மட்டுமே வெளிப்படுத்தத் தெரிந்திருந்த மூளையே போதுமானதாக இருந்தது. இன்றைக்கும் 'அமைக்டாலா' செயற்பட்டுக் கொண்டிருப்பதுடன் உணர்ச்சிகளுக்கு ஒரு மேலாண்மை மையமாகவும் செயற்படுகிறது. அதாவது, அமைக்டாலா செயல் குறைந்து இருந்தால் சந்தோசம். உற்சாகம் போன்ற உணர்ச்சிகளும் செயல் மிகுதியாக இருந்தால் கோபம், பொறாமை ஆகிய உணர்ச்சிகளும் தோன்றும். அமைக்டாலா என்பது ஆதிகால மூளை என்றும், அதற்கு அச்சம், காதல் ஆகிய இரண்டு உணர்ச்சிகள் மட்டும்தான் தெரியும் என்று முன்னர் கூறியதே. இது பரிணாம வளர்ச்சிக் காலத்தில் போதுமானதாக இருந்தது. இன்று நாகரிகமான காலத்தில் மனிதன் அச்சம்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் மிகமிக குறைவு. காதல் செய்வதற்கும் தடை இல்லை. அப்படியானால் மனித நாகரீக பரிணாம வளர்ச்சியில் மறைந்துபோன சில உறுப்புகளைப்போல அமைக்டாலாவும் மறைந்துவிட்டதா? எனில், இல்லை என்பதே உண்மை. இன்றைய மனிதன் சிந்திக்கத் தொடங்கியபின் அவனுடைய மூளையில் கற்பனையாகவோ அல்லது சிலசமயங்களில் உண்மையாகவோ, ஆதிகால மனிதனுக்கு இருந்த சூழல் இப்போதும் இருப்பதால் மறைந்துபோன பிற உறுப்புகளைப் போல் அமைக்டாலாவும் மறைந்துவிடவில்லை.

அமைக்டாலாவில் குடி கொண்டிருந்த ஆதிகால காதல் உணர்வின் வியக்கத்தக்க நாகரீகமான பரிணாம வளர்ச்சியே இன்றைய அழகியல் உணர்ச்சியும், பாராட்டுணர்ச்சியும் ஆகும். அஃதாவது, 'ரெனி டேஇய்ஸ்கார்ட்ஸ்' என்ற அறிஞன் அடிப்படை உணர்ச்சிகள் ஆறு எனக் கூறுகிறார். அவையாவன, 'ஆச்சர்யம், காதல் (அன்பு), ஆசை, வெறுப்பு, மகிழ்ச்சி மற்றும் சோகம்.' இவ்வடிப்படை உணர்வுகளில் சோகம், வெறுப்பு தவிர மற்றைய நான்கின் வாயிலாகவும் பாராட்டுணர்வு வெளிப்படும். நீண்டகால அகவுணர்வின் நிலைத்த தன்மைக்கு துணைபுரிவது பாராட்டுணர்வே ஆகும். தொல்காப்பியரும் இப்பாராட்டுணர்வை,

"மெய்தொட்டுப் பயிறல் பொய்பாராட்டல்" (Thamizhannal, 2010)

என்பதாகவும்,

"பாராட் டெடுத்தன் மடந்தப வுரைத்த" (Thamizhannal, 2010)

என்பதாகவும் சுட்டி பாராட்டுணர்வே அகஉணர்வை மிகுவிக்கும் கருவி என்றளவில் உரைத்து நிற்கிறார். இச்சூத்திரங்களுக்கான உரைகளை நோக்குங்கால், அவை பாராட்டுணர்வைப் பற்றிய ஆழமான கருத்துக்களைத் தருகின்றன. பாராட்டாவது,

"தலைமகன் நின்ற நிலையையுங் கூறிய கூற்றையும் தனித்த வழியும் எடுத்து மொழிதல்"

என்ற இளம்பூரணர் உரை, பாராட்டுணர்வை இயற்பட மொழிதல் எனாது, தனிப்பட்ட மொழிதல் என்று பாராட்டும் தன்மையின் தனிநிலையை சுட்டுகிறது (Thamizhannal, 2010).

"பாராட்டெடுத்தல் - புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்த் தலைமகளை இயற்பட நினையுங் குறிப்பும், இது பாராட்டென்னாது எடுத்தலென்றதனால் அதனை உள்ளமெடுத்தன் மேற்கொள்க. இது தலைமகற்கும் ஒக்கும்" (Thamizhannal, 2010)

என்ற பேராசிரியரின் கூற்று, 'இயற்பட மொழிதல்' என்ற பாராட்டுணர்வைச் சுட்டினாலும், புணர்ச்சியின் பின் இயற்பட மொழிந்தாலும் அது 'இயன்மொழி ஆகாது' என்பதால் அஃது பாராட்டு என்பதாகவே கொள்ளப்படுகிறது. பேராசிரியரின் இம்மறைமுகச் சுட்டு வர்ணணை பாராட்டுணர்வை முழுமையாக அகவுணர்வோடு தொடர்புபடுத்திக் கூறுவதாக அமைகிறது. இவ்வாறு, தமிழ்ச்

சிந்தனையாளர்கள் பலராலும் பாராட்டல் என்னும் உணர்வு அன்றே ஆளுமை உணர்வாகக் கையாளப்பட்டதை மேற்கூறிய சூத்திரம், உரைகளால் தெளிவாக அவதானிக்கலாம். இத்தகைய பாராட்டுணர்வு தொகைநூல்களில் பலவாறாகப் பயின்று வந்துள்ளது. இவற்றை ஒவ்வொரு அகமாந்தரும் அவ்வச்சூழ்நிலைகளுக்கு ஏற்றாற்போல் தன்வினை நிகழ்த்துதற்க்கும், நலமாய் முற்றுபெற்ற வினைக்கு மகிழ்ந்து பாராட்டும் பொருட்டும் பயன்படுத்தி இருக்கின்றனர். அகக் கூற்றுக்களின்வழி வெளிப்படும் இவ்வாளுமைச் செய்திகளை கீழ்வருமாறு காணலாம்.

## தோழியின் பாராட்டுணர்வு

தோழி என்பவள் தலைவன் தலைவியின் அகவாழ்க்கையை ஒன்றிணைக்கும் காந்த விசையைப் போன்றவள். களவில் தோழியின் பாராட்டு பெரும்பான்மையும் 'வரைவு' என்னும் இலக்கை ஒட்டியே அமையும். தலைவன் நிகழ்த்தாத செயலைப் பாராட்டி அச்செயலைப் புரிய தலைவனைத் தூண்டும்வகையில் சில நேரங்களில் தோழியின் பாராட்டு அமையும். வேறுசில நேரங்களிலோ தலைவன் புரிந்த சிலஅரிய செயல்களுக்காக தோழி அவனை உளமாரப் பாராட்டி அதன்வழி வரைவைப் புகுத்துவாள். இவ்வாறு, பல வண்ணங்களில் அமைந்த தோழியின் பாராட்டுத் திறனை இருபிரிவுகளில் கீழே காணலாம்.

## தலைவனின் பண்புக்குப் பாராட்டு

களவுகாலங்களில் சிலஅரிய பொழுதுகளிலும் செவ்வியறிந்து தலைவன், தலைவியை சந்திக்க முயன்ற தலைவனின் அருள் தன்மையைப் பாராட்டுவதாக அமைந்த தோழியின் புகழுரை இது.

"பதுக்கைத்து ஆய ஒதுக்கரும் கவலைச்

சிறுகண் யானை உறுபகை நினையாது,

யாங்குவந் தனையோ பூந்தார் மார்ப!

அருள்புரி நெஞ்சம் உய்த்தர

இருள்பொர நின்ற இரவி னானே?" (Avvai Duraisamy Pillai, 1957)

இத்தொகைப் பாடல் தலைவனின் பண்பு பற்றிய புகழுரை ஆகியது. இப்பாடலில், தோழியின் பாராட்டும்திறனை பாராட்டல் என்ற நிலையிலிருந்து, 'பண்பு பாராட்டல்' என்ற நிலைக்கு உயர்த்துவது,

"சிறுகண் யானை உறுபகை நினையாது

யாங்குவந் தனையோ"

என்ற அடிகளே ஆகும். அஃதாவது, சிறுகண்களை உடைய யானையின் பெரும் பகைக்கு அஞ்சாது தலைவியைச் சந்திக்கவந்த தலைவனின்பால் உள்ளது அப்பெரும் பகையினும் மேலான பேரருளே என்பதை தோழி 'அருள்புரி நெஞ்சம் உய்த்தர' என்பதாக விளக்குகிறாள். ஆக, தலைவனின் அருள் என்ற குணத்திற்கு அப்பாற்பட்டவையே மற்றவையெல்லாம் என்பதே இங்கு தோழி பாராட்டுரையின் உட்பொருளாகும். தோழி தலைவனின் மேம்பட்ட குணத்தை பாராட்டும் தன்மையை குறிஞ்சிப்பாட்டும்,

"அதற்கொண்டு

அன்றை அன்ன விருப்போடு என்றும்

இரவரல் மாலையனே வருதோறும்

இளமையின் இகந்தன்றும் இலனே, வளமையின்

தன்நிலை தீர்ந்தன்றும் இலனே" (Subramanian, 2003)

என்பதாக விளக்கி, தலைவனின் அருளையும் அருளால் அவன் மேம்பட்ட தன்மையும் பெரிதும் சுட்டி தோழியின் பண்பு பாராட்டலுக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

## தலைவனின் வழிப்பாராட்டல்

கற்புக் காலங்களில் தலைவன் தலைவியைவிட்டு பொருள்தேடிப் பிரிந்து நீண்டகாலம் உரையாது திரும்புகையில் தோழியானவள் அவனை மிகுத்துப் பாராட்டி உரைக்கும் வண்ணம் அவனது வலிமையை பெரிதும் உவமிப்பாள். இச்சான்றுப் பாடலும் தோழியால் வர்ணிக்கப்பட்ட தலைவனின் வலிமையைப் பற்றியதே.

"கொன்றைப் பூவின் பசந்த உண்கண்,

குன்றக நெடுஞ்சுனைக் குவளை போலத்

தொல்கவின் பெற்றன இவட்கே வெல்போர்

வியல்நெடும் பாசறை நீடிய

வயமான் தோன்றல்! நீவந்த மாறே" (Rasamanikam, 1947)

என்ற தொகைப்பாடல், தலைவன் வருகையின் விரைவை உரைப்பதற்காக அவன் வீரத்தை உவமிப்பதாக அமைகிறது.

"கொன்றைப் பூவின் பசந்த உண்கண்"

என்ற அடியில், தலைவனின் வருகைக்குமுன் இருந்த தலைவியின் துயர்நிலை சுட்டப்படுகிறது. இத்துயர் நிலையைப்போக்க தலைவன் வருகை விரைவில் அமைந்தமைக்காக அவனை 'வயமான் தோன்றல்' என்பதாக உவமிக்கிறாள் தோழி. பாசறை நின்று தலைவன் போர் வென்றமையாலும் இல்லத்தில்வந்து தலைவியின் துயர் வென்றமையாலும் தலைவனைப் பாராட்டிய மேற்கூறிய பாராட்டுரை பொருத்தமாக அமைகிறது. தலைவனின் வலிமையை பாராட்டும் குறிஞ்சித் தோழியின் அடிகள். இவை.

"மாறுபொருது ஒட்டிய புகல்வின் வேறுபுலத்து

ஆகாண் விடையின் அணிபெற வந்துஎம்" (Subramanian, 2003)

இவ்வடிகளில், தலைவியின் துயரைக் களைவதற்காக தலைவன் விரைவில் வந்ததன் பொருட்டே அவனது வலிமை இங்கு பாராட்டப்படுகிறது. விரைவான வருகையின் காரணமாய் தலைமகனின் பண்பு பாராட்டப்படுதல் என்னும் சான்றொப்புமையால் குறிஞ்சித் தோழியின் பாராட்டுரை ஈண்டு ஏற்கற்பாலது. ஆக, தோழி என்ற சங்கப் பாத்திரம் தன் மகிழ்ச்சியின் காரணமாக வெளிப்படுத்தும் பாராட்டுத்திறன் தலைவனின் எண்ணங்களின் ஊடாய்ச் சென்று வரைவு என்ற இலக்கிற்கு உந்து சக்தியாய் அமையும் என்பதை தோழியின் பாராட்டுரைவழி தெள்ளிதின் அறியமுடிகிறது.

## தலைவனின் பாராட்டுத்திறன்

சங்க அகமாந்தர்களுள் முதன்மையாகக் கருதப்படுபவன் தலைவன். தலைவனின் பாராட்டுத் திறன்கள் சங்க அகமாந்தர்களின் செயல்பாட்டைப் பொறுத்தே அமைகிறது. மகிழ்ச்சியின் காரணமாக பாராட்டுணர்வு வெளிப்படும். ஆயினும், தலைவனைப் பொறுத்த அளவில் காரணத்தின் அடிப்படையிலேயே அவன் பாராட்டுவதாய் பாக்கள் புனையப்பட்டுள்ளன.

### தலைவியின் பண்பைப் பாராட்டுதல்

தலைவன் தலைவியை களவில் பாராட்டும்போது அவள் அழகு நலத்தை மிகுத்துக் கூறுவதாகவும், கற்பில் பாராட்டும் போது அவளது குண மேம்பாட்டை மிகுத்து கூறுவதாகவுமே

சங்கப்பாடல்கள் சான்று பகர்கின்றன. கற்பில் ஒரு தலைவியின் குணச்சிறப்பை ஒரு தலைவன் உள்ளூரப் பாராட்டிக் கூறுவதாய் அமையும் பாடல் இது.

"உள்ளுதற்கு இனிய மன்ற! செல்வர்

யானை பிணித்த பொன்புனை கயிற்றின்,

ஒள்ளரி மேய்ந்த சுரத்திடை

உள்ளம் வாங்கத் தந்தநின் குணனே" (Avvai Duraisamy Pillai, 1957)

கற்பில் பொருள்தேடி பிரிகிறான் ஒரு தலைவன். அவன் செல்லிடம் 'ஒள்ளரி மேய்ந்த சுரமாய்' அமைந்திட அங்கு தலைவியின் குணத்தை உள்ளூற நினைக்கையில் அச்சுரம் 'உள்ளுதற்கு இனியதாகிறது'. ஆகையால், இங்கு 'உள்ளம் வாங்கத் தந்தநின் குணனே' என்ற தலைவனின் பாராட்டுரைக்குக் காரணம் அவன் சென்ற வழி அவனுக்கு அக்குணத்தால் இனிமைப் பயத்ததே ஆகும். தலைவனின் மனமது இனிமையானதால் தலைவனின் வழியும் இனிமையானது என்ற ஆளுமைக் கருத்துரு மேற்கூறிய பாராட்டுரையில் இருந்து வெளிப்படும் உள்ளுறை ஆகும்.

## தலைவியின் அழகுநலம் பாராட்டல்

களவு, கற்பு என்ற இரு பொழுதுகளிலும் தலைவியின் சான்றாண்மை தலைவனின் மனத்தைக் கவர்ந்தாற் போலவே தலைவியின் அழகு நலம் தலைவனின் விழியைக் கவர்ந்தது என்ற கூற்று மறுக்க இயலாத ஒன்று. தலைவியின் அழகு நலன்களை தலைவன் ஒருவன் மிகுத்து பாராட்டுவதாய் அமைந்த பாடல் இது.

"நின்நுதல் நாறும் நறும்தண் புறவில்

நின்னே போல மஞ்ஞை ஆலக்

கார்தொடங் கின்றால் பொழுதே" (Avvai Duraisamy Pillai, 1957)

என்ற பாடலடிகளின் தலைவியின் நுதல் போல் மணம் வீசும் சாந்து என்றும் தலைவியின் சாயல் போல் ஆடும் மயில் என்றும் பாராட்டும் மிகைத் தன்மை குறிக்கப்படுகிறது. இங்கு 'நுதல் போல் நாறும், நின்னை போல மஞ்ஞை ஆல' என்ற இரண்டு தொடர்களும் மிகைப்பாட்டைக் கூறும் உவமையின்வழி பாராட்டுரைக்கு பெரும் சான்றாகிறது. தலைவனின் இப்பாராட்டு உரைக்குக் காரணம் கார்கால வர்ணனை அனைத்தும் தலைவியை நினைவூட்டுவதே ஆகும். இடைக்கால இலக்கியங்களில் ஒரு தலைவன் இங்ஙனமே தலைவியின் நலனைப் பாராட்டுவதாய் அமையும் கலம்பகப் பாடல் இது.

"மயில் கண்டால் மயிலுக்கே வருந்தி ஆங்கே

"மான்கண்டால் மானுக்கே வாடி மாதர்" (Kadhir Muruku, 2017)

இப்பாடல், தலைவியின் உருவ நலத்தை உருவகிக்கும் தன்மையின் ஒருமைப்பாட்டால் மேற்சொன்ன தலைவனின் பாராட்டுரையோடு ஒருங்கு வைத்து என்னற்பாலது.

## பழிப்பதுபோல் பாராட்டும் தன்மை

தலைவன் தலைவியின் குணச் சிறப்பையும் அழகு நலத்தையும் பாராட்டும் தன்மையின் சிறு மாற்றமே பழிப்பது போல் பாராட்டும் தன்மை. எஞ்ஞான்றும் தலைவியை நேரிடையாக பாராட்டிக் கொண்டிருக்கும் வழக்கத்தை மாற்றி புலவர்கள் கொண்ட ஒரு சிறு இலக்கியச்சுவை என்றும் இதை கூறலாம். பழிப்பதுபோல் புகழும் தலைவனின் பாராட்டுத் திறனுக்குச் சான்றாய் அமைந்த பாடல் இது.

"தொடலை தைஇய மடவரல் மகளே!

கண்ணினும் கதவ, நின் முலையே!

முலையினும் கதவநின் தடமென் தோளே!" (Avvai Duraisamy Pillai, 1957)

இப்பாடலிலுள்ள, 'கதவ' என்னும் சொல்லே சிறப்பு அடையாளச் சொற் கூறாகிறது. அஃதாவது, 'கண்ணினும் கதவ நின் முலையே' என்றதன்வழி கண்ணைவிட மார்பு சிறந்தது என்ற பொருள் தொணிக்கிறது. 'முலையினும் கதவ நின் தடமென் தோளே' என்பதன்வழி மார்பினும் தலைவியின் மென்மையான தோள் சிறந்தது என்ற பொருள் வெளிப்படுகிறது. ஆக இங்கு கதவ என்னும் சொல்லே தலைவனின் இயல்பு நவிற்சி உரையை அதற்கு மேலான பாராட்டுரையாய் மாற்றுகின்ற பழிப்பின் மென்மையான சாயல் படர்ந்த சொல்லாகிறது. இங்கு கதம் - சினம் என்பதைக் குறிக்கும் சொல்லே 'கதவ' என்பதாகி பாராட்டுரையானது குறிப்பிடத்தக்கது. மேலும், பழிப்பின் சாயல் படர்ந்த இத்தகைய மென்மையான பாராட்டுரை இடைச்சுரத்தில் தலைவிக்கு நகைப்பூட்டும் ஆதலால், இப்பாராட்டுரை ஆளுமை என்ற அளவிலும் கூறத்தகுவதாகும்.

## தலைவன் பாங்கனைப் பாராட்டல்

அகவாழ்வில் தலைவிக்குத் தோழி போலவே, தலைவனுக்குப் பாங்கன் உற்றத் துணைவனாகிறான். ஆனால், தோழி என்னும் பாத்திரத்திற்குப் புலவர்கள் அளித்த முதன்மைத்துவம் பாங்கன் என்னும் பாத்திரத்திற்கு அளிக்கப்படாமையின் காரணம் இன்றும் ஆய்விற்குரிய களனாகவே அமைகிறது. எனினும், ஒரு சில இடங்களில் பாங்கன் தலைவனால் குறிக்கப்படுகின்றான். பாராட்டவும் படுகின்றான். பாங்கனின் இன்றியமையாமையை விளக்கும் ஒரு பாராட்டுரை இது.

"எலுவ! சிறாஅர் ஏமுறு நண்ப!

புலவர் தோழ! கேளாய் அத்தை" (Somasundarananr, 1965)

என்ற பாடல் குறிக்கும், 'எலுவ' என்ற சொல் தலைவனுக்குப் பாங்கன் சரிநிகர் சமம் என்பதையும் தலைவன் தன் உள்ளத்துக் கருத்துக்களை மறைவின்றி பகிர்ந்து கொள்ளும் உற்றத் துணைவன் என்பதையும் புலப்படுத்துகிறது. 'சிறாஅர் ஏமுறு நண்ப' என்ற தொடர் பாங்கன் தலைவனால் நிகழ்த்தப்படும் எவ்வகைச் செயல்பாட்டிற்கும் ஆதரவாளர் என்பதைச் சுட்டுகிறது. 'புலவர் தோழ' என்னும் பாராட்டுரை பாங்கனின் தனித்திறனையும் தனித்திறனுக்கு அப்பாற்பட்ட தலைவனின் மகிழ்ச்சியின் மிகைப்பாட்டையும் விளக்கி நிற்கிறது. ஆக, தலைவன் பாங்கனை பாராட்டும் திறனில் கூட மேற்கூறிய பல காரணங்கள் உட்பொதிந்து அப்பாராட்டுரையை ஆளுமைத் தன்மைக்கு உயர்த்துவதாய் அமைகிறது.

## தலைவன் பாகனைப் பாராட்டல்

சங்க மரபில் செல்வந்த நிலையில் போற்றப்பட்ட தலைமகன்களின் பயணத் தோழன் பாகன் ஆவான். காலில் பிரிவு மேற்கொள்ளும் தலைமகன்கள் சங்க மரபின் இடைநிலை வர்க்கத்தினராகவே இருந்திருக்கின்றனர். மேற்கூறிய செல்வத்தலைமகன் அல்லது மன்னர் என்ற நிலையில் மதித்துப் போற்றுவதற்குரிய உயர்குடி தலைமகன்கள் மட்டுமே தங்கள் அக உணர்வை வெளிப்படுத்த பாங்கன் என்ற நிலையைத் தாண்டி பாகன் என்ற நிலை மாந்தரையும் பெற்றிருந்தார்கள். வினை முடித்து வரும் ஒரு உயர்குடி தலைமகன் வழிச்செலவில் தனக்கு பேருதவி புரிந்த பாகனை கீழ்காணுமாறு பாராட்டுகிறான்.

"சேயாறு செல்வாம் ஆயின், இடர்இன்று,

களைகலம் காமம், பெருந்தோட்கு' என்று

நன்றுபுரிந்து எண்ணிய மனத்தை ஆகி,

முரம்புகண் உடைய ஏகி, கரம்பைப்

புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்!

இன்று தந்தனை தேரோ

நோய் உழந்து உறைவியை நல்கலானே?" (Somasundarananr, 1965)

என்ற குறுந்தொகைப் பாடலில் குறிக்கப்பெறும் 'நன்று புரிந்து எண்ணிய மனத்தை' என்ற கூற்று தலைமக்கள் அகவாழ்க்கையில் பேரின்ப நிலை பெறச்செய்த நல்ல மனம் உடையவன் என்ற பொருளை விளக்குகிறது. 'கரம் பைப் புதுவழிப் படுத்த' என்னும் தொடரில் பாங்கன் தலைவன் பால் கொண்ட பேரார்வமும் பாங்கன் மேற்கொள்ளும் வினையில் கண்ட இறைநிலையும் உட்பொதிந்த பொருளாகிறது. 'மதியுடை வலவோய்' என்னும் கூற்று பாங்கன் என்னும் நிலையையும் தாண்டி தலைவனுக்குச் செய்யும் அரும்பெரும் தொண்டை குறித்து நிற்கிறது. 'இன்று தந்தனை தேரோ' எனும் கூற்று பாங்கன் என்பவன் உயர்குடி தலைமக்கள் வாழ்விற்குக் கிடைத்த அரும் மருந்து என்பதை கூறி நிற்கிறது. மேற்கூறிய அனைத்து பாராட்டுரையும் தலைவனின் மகிழ்ச்சி என்னும் வாயிலில் இருந்து புறப்பட்ட கூற்றுக்கள் எனினும் அவை பாங்கனின் அறியப்படாத சில அரிய தன்மைகளை விளக்குவதால் இப்பாராட்டுரை 'பாராட்டு' என்ற நிலையையும் கடந்து ஆளுமைத் தன்மைக்கு உயர்கிறது. மேற்கூறிய பாராட்டு உணர்வுகள் அனைத்துமே அகமாந்தர்கள் செய்கின்ற செயல்பாட்டை விட மேம்பட்ட செயல்களை செய்ய வேண்டும் என்பதை ஊக்குவிக்கும் உந்து சக்திகளாக செயல்பட்டன என்பது இங்கு தெள்ளிதின் அறிய வருகிறது.

## முடிவுரை

உள்ளம் கிளர்ந்து மகிழ்ச்சி மேலிட வந்து விழும் வெற்றுச் சொற்களாக மேற்ச் செப்பிய பாராட்டுரை எதுவும் அமையவில்லை என்பதை sமேற்கூறிய சான்று பாடல்களே தெளிவுறுத்தி நிற்கின்றன. பாத்திர கூற்றுகளாக அமைந்துள்ள பழந்தமிழ் தொகை பாடல்களில் பயின்று வரும் பாராட்டுரைகள் அனைத்தும் நலம் பாராட்டும் நல்லுறையாக மட்டுமல்லாமல், குணம் பாராட்டும் குறிப்புரைகளாகவும் அமைகின்றன என்பதை மேலே கட்டுரை தெளிவாக எடுத்துரைக்கிறது. புகழ் எனின் உயிரும் கொடுக்கும் பண்புடையவர்களாய் புலவர்களால் பாராட்டப்படும் பழந்தமிழ் மாந்தர்கள் தம் அக வாழ்வில் பாராட்டுறையை நல்வினை நிகழ்த்தும் உளவிசையாக மாற்றி புகுத்தி உள்ளமை மேற்கூறிய கட்டுரையின் வழி தெளிவாக வெளிப்படுகிறது. கலவை நீட்டிக்காமல் வரைவுக்கு தூண்டுதல், கற்பு வாழ்வு மேம்பட தலைவனின் பிரிவை தவிர்த்தல் ஆகியவற்றை நிகழ்த்திய தோழியின் பாராட்டுரையும், கொடுமையான பாலை நிலத்தின் கண் தலைவனுக்கு வழி துணையான தலைவியின் குணம் பற்றிய பாராட்டுரையும் பழந்தமிழ் மக்களின் உளவியல் பாங்கில் அமைந்த உயரிய பண்புகள் ஆகும். இவ்வாறு, பாராட்டெடுக்கும் ஆளுமை திறன் நல்வினையாற்றும் செயல்பாட்டிற்கு முன்னிலையாக பயன்பட்டுள்ளது. இவை பழந்தமிழரின் சால்புக்குச் சிறந்த சான்றுகள் ஆகும்.

## References


Avvai Duraisamy Pillai, (1957) Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Kadhir Muruku, (2017) Nandhi Kalambagam, Gowra Publications, Chennai, India.

Rasamanikam, R., (1947) Eighteen Lesser Texts (Origin and Text), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Somasundarananr, P.V. (1965) Kurunthogai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India

Subramanian, S.V. (2003) Sanga Ilakkiyam Pathupattu - Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License